# பத்திரிக்கைச் செய்தி

## பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய இராணுவ வீரரிடம் லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது

புகார்தாரர் திரு.தமிழரசன், கேத்தாண்டப்பட்டி கிராமம், திருப்பத்தூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் இராணுவத்தில் பணிபரிந்து வருகிறார். புகார்தாரரின் தந்தையின் பெயரில் மல்லகுண்டா கிராமத்தில் 1.64 ஏக்கர் நிலம் உள்ளது. புகார்தாரரின் தந்தை அந்த நிலத்தை கடந்த 01.06.2017 அன்று தான செட்டில்மென்ட் மூலம் புகார்தாரருக்கு பதிவு செய்து கொடுத்துள்ளார். கடந்த 01.01.2023ம் தேதி விடுப்பில் சொந்த ஊருக்கு புகார்தாரர் வந்தவர், தன்னுடைய தந்தை தான செட்டில்மென்ட் மூலம் கொடுத்த நிலத்தை தன்னுடைய பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய வேண்டி கடந்த 12.01.2023ம் தேதி இசேவை மூலம் ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளார். 13.01.2023ம் தேதி அன்று மனு சம்பந்தமாக திரு.முனியப்பன், மல்லகுண்டா கிராம நிர்வாக அலுவலர் திரு.முனியப்பனை பார்க்க சென்ற போது அவர் அலுவலகத்தில் இல்லாதால் அவரின் தொலைபேசி எண்ணை வாங்கி அவரை தொடர்பு கொண்ட போது அவர் புகார்தாரரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தண்ணீர் பந்தல் பஸ் ஸ்டாப்பில் வந்து நிற்க சொல்லி உள்ளார். அவ்வாறு பஸ் ஸ்டாப்பில் நின்ற போது அங்கு வந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.முனியப்பன், புகார்தாரரின் விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து மேலனுப்ப தனக்கு ரூ.4,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். புகார்தாரர் தன்னால் பணம் கொடுக்க இயலாது என கூறியவுடன் திரு.முனியப்பன் லஞ்ச பணத்தை ரூ.3,000/-மாக குறைத்து பணம் கொடுத்தால்தான் பட்டா மாற்றம் செய்ய பரிந்துரை செய்ய முடியும் என்று கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருப்பத்தூர் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 24.01.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு.முனியப்பன், கிராம நிர்வாக அலுவலர், மல்லகுண்டா கிராமம் லஞ்ச பணம் ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

**VAO TRAPPED & ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE FOR PATTA NAME TRANSFER**

The complainant Tr.Tamilarasan, is residing at Kothanttapatti Village, Sugarmill Post, Natrampalli Circle, Tiruppathur District, and he is in military service. On 01.06.2017, the complainant's father registered his property 1.64 Acre land at Mallangunda Village, Thirupattur District to the complainant through dhana settlement. The complainant came to his village on leave and he applied for patta name transfer through online on 12.01.2023. On 13.01.2023 he approached the VAO office for knowing the status of his application. As the VAO Tr.Maniappan, Mallagunda Village, was not in office, the Complainant contacted the VAO over phone and the VAO asked the complainant to wait at the Thaneerpandal Bus Stop. After some time Tr.Muniappan came to the bus stop and demanded Rs.4,000/- as bribe for processing his application. Later Tr.Muniappan reduced the bribe amount to Rs.3,000/-. As the complainant not willing to give the bribe, he approached the Vigilance and Anti-Corruption, Tiruppathur detachment and preferred a complaint. In this connection a case was registered and a trap was organized today 24.01.2023. During the trap Tr.Muniappan, Village Administrative Officer, Mallagunda, reiterated his demand and received the bribe amount of Rs.3,000/- from the complainant. The accused was caught red handed by the DVAC and remanded to judicial custody.